# மாணவர்களிடம் படித்தல் திறனை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு

***முனைவர் ப. லாவண்யா***
உதவிப்பேராசிரியர்
அன்னம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரி, தூத்துக்குடி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6428

***முன்னுரை***

*இன்றைய உலகமயமான சூழலில் படித்தல்திறன் மிகவும் இன்றியமையாதது. தாமஸ் ஜெபர்சன் என்ற கல்வியாளரின் கருத்துப் படி, படித்தல திறன் மக்களிடையே அறியாமை மற்றும் மூடநம்பிக்கையை விரட்டுகிறது என்கிறார். அச்சிடப்பட்ட சொற்கள் நமது சிந்தனையைப் புரட்டிப்போடும் ஆற்றல் கொண்டது. இது வாசகனை ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்க உதவுகின்றது. வாசித்தலின்போது வாசகனின் மனம் கவனச் சிதறல் ஏற்படாமல் மனம் ஒன்றுபட்டு ஈடுபடுதல் வேண்டும். ஆசிரியர்கள் அனைத்து வகையான வாசிப்புக்கும் முக்கியமாக விமர்சன படித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். படித்தல் திறன் உடையவனால் தான் உலக அறிவைப் பெறஇயலும்.*

**படித்தல் திறன்**

மொழியானது முதலில் ஒலி வடிவமாக உருவாகிப் பின் எழுத்து வடிவமாக உருப்பெற்றது. மொழியின் முதல் காரணமான ஒலிகள் சேர்ந்து எழுத்துக்கள் உருவாயின. இதையே நன்னூல் நூற்பா,

**“மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி**
**எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே” - நன்னூல் *3***

என்று உரைக்கின்றது. எழுத்து வடிவங்களைக் கண்களால் கண்டு, வாயால் ஒலித்து, அவற்றின் பொருளை உணரும் செயலே படித்தல் எனப்படும்.இவை மூன்றும் ஒருங்கிணைந்து நடைபெற்றால் தான் மாணவனின் படித்தல் திறன் சிறப்படையும்.

**படித்தலின் வகைகள்**

படித்தல் மூன்று வகைப்படும். அவை அகன்ற படிப்பு, ஆழ்ந்த படிப்பு, மற்றும் வாய்மொழிப் பயிற்சி. மாணவர்கள் அதிக அளவில் படிக்க கற்றுக்கொள்ள சிறந்த வழிவகுப்பது அகன்ற படிப்பே ஆகும். எந்தவொரு பகுதியையும் விடாமல் அனைத்தையும் கருத்தூன்றிப் படிப்பதே ஆழ்ந்தபடிப்பு எனப்படும். வாய்மொழிப்பயிற்சி என்பது தெளிவாக ஒலிஉச்சரிப்புடன் மாணவர்களை வாசிக்கப் பயிற்றுவிப்பது ஆகும். மாணவர்களை எழுத்துக்கள் உணர்த்தும் ஒலியைச் சரியாக உச்சரிக்கப் பயிற்றுவிக்கவேண்டும்.

### அகன்ற படிப்பு

அகன்ற படிப்பு என்பது செய்திகளை மட்டும் மேலோட்டமாகப் படித்துவிட்டுச் செல்வது ஆகம். பாடநூல்களைத் தவிர பிற நூல்களையெல்லாம் மேம்போக்காகப் படித்துச் செல்வது அகன்றபடிப்பாகும். இதில் எல்லாப்பகுதிகளையும் படிக்கவேண்டியது இல்லை. விருப்பமில்லாத பகுதிகளை விட்டு விடலாம். இது முழுவதும் மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் நடை பெறுவதாகும். அகன்றப்படிப்பிற்குரிய நூல்களை ஆசிரியரே மாணவர்களுக்கு அடையாளம் காட்டுதல் வேண்டும். இது மாணவர்களிடம் கருத்துக் கோவை, ஒருங்கமைத்தல், கண்டறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றை வளர்க்கும்.

இதழ்கள் வாசித்தல், செய்தித்தாட்கள் வாசித்தல், பத்திரிக்கைகள் வாசித்தல் ஆகியன இதில் அடங்கும். ஆசிரியர்கள் பள்ளிகளில் வாசிப்புக் கழகத்தினைத் துவங்கி ஒவ்வொரு மாணவனையும் வாசிக்கப் பயிற்சியளிக்கலாம். அகன்ற படிப்பு மாணவர்களிடம் படிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி அவர்களைப் புதிய நூல்களைப் படிக்கவும், பல்துறை அறிவுபெறவும், வகுப்பறை அறிவை பிற நூல் அறிவுடன் வலுப்படுத்தவும் உதவும்.

### ஆழ்ந்த படிப்பு

பாடநூல்கள் ஆழ்ந்த படிப்பிற்குரியன. அவற்றில் உள்ள கருத்துகளை ஆழமாக, நுட்பமாக உணர்ந்து படித்தால் அவை நெடுங்காலம் நிலைத்துநின்று கற்றலை வலுப்படுத்தும். ஆழ்ந்து படித்தல் என்பதில் படித்ததைச் சிந்தித்தல், புதிய உணர்ச்சிகளைப் பெறுதல், மனதில் பதித்தல் போன்றவை அடங்கும். கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் பெறுவதற்கும், படைப்பாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும், மொழியைச் செம்மையாகக் கையாளும் திறன் பெறுவதற்கும், மொழியமைப்பு மற்றும் மொழிக் கூறுகளைப் புரிந்து கொள்வதற்கும், ஒலி வேறுபாடுகளை அறிந்து கொள்வதற்கும் ஆழ்ந்தப்படிப்பு துணைபுரிகின்றது.

### விமர்சன வாசிப்பு

விமர்சனம் என்றால் பாரபட்சமின்றி மதிப்பீடு செய்வது. பொதுவாக மூன்று வகையான விமர்சன வாசிப்பு உள்ளன. அவை,

(அ) வரிகளைப் படித்தல்
(ஆ) வரிகளுக்கு இடையே படித்தல் மற்றும்
(இ) வரிகளுக்கு அப்பால் படித்தல்.

வெற்றிகரமான வாசிப்பில் விமர்சன சிந்தனை அடங்கும். மாணவர்கள் தாங்கள் படிக்கும் செய்திகளைக் கொண்டு அறிவார்ந்த முடிவுகளை எடுக்க விமர்சன வாசிப்பு திறன் அவசியம். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விமர்சன வாசிப்பில் பயிற்சி அளிக்க வேண்டும் ஏனெனில் எழுத்தாளர் எழுதுவதை மட்டும் மாணவர்கள் மேலோட்டமாக அறிவதோடு மட்டுமன்றி அவர் உணர்த்த வரும் பொருளை அறிய இந்த வாசிப்புத் திறன் உதவும். மேலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிக்கல்களைத் தீர்க்கும் திறன், பகுத்தாய்ந்து முடிவுகளை எடுக்கும்திறன் மற்றும் மதிப்பீடு செய்யும் திறன் ஆகியவற்றில் பயிற்சியளிக்க வேண்டும்.

### விரைவாகப் படித்தலை மேம்படுத்தும் முறைகள்

#### கண்சாண் அளவு

படிக்கும் பொழுது கண் வரி வடிவத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப்பார்க்கிறது. பின்பு அடுத்த பகுதியைப் பார்க்கிறது. ஒரு தடவை பார்ப்பதால் கண்டறிகின்ற சொற்றொகுதியைக் கண்சாண்அளவு என்பர். “கந்தன் தன் நண்பனைக் கடைத்தெருவில் கண்டான்” என்னும் தொடரில் கந்தன் என்பதை மட்டும் ஒரு தடவையில் பார்க்க முடியும் எனில்படிக்கும் வேகம் குறையும். “கந்தன் தன் நண்பனைக்” என்பது வரை ஒரு தடவையில் பார்க்கமுடியுமெனில் படிப்பின் வேகம் மிகுதிப்படும். இக்கண் சாண் அளவு பெரியதாய் அமையப்பயிற்சி பெறல் வேண்டும்.

**கண் நகர்ச்சி**

ஒரு தடவை பார்த்தபின் கண் அடுத்த பகுதியைப் பார்க்கக் குதிப்பது போல் செல்கிறது இதனைக் கண்குதிப்பு என்பர். இதனையே கண் நகர்ச்சி எனவும் கூறுவர்.

**கண் நிறுத்தம்**

ஒரு பகுதியைப் பார்க்கும் நேரம் கண் நிற்பதைக் "கண் நிறுத்தல்" என்பர். ஒரு பகுதிக்குகால் வினாடி தேவை எனக் கூறுவர். இக்கண் நிறுத்தம் அதிகமாயின் படிப்பின் வேகம்குறையும். நிறுத்தும் காலத்தைக் குறைத்துப் படிக்கப் பயிற்சி பெற வேண்டும்.

**கண் பாய்ச்சல்**

ஒரு தொடர் முடிந்ததும், அடுத்த தொடருக்குக் கண் பார்வை தாவுகிறது. இத்தாவுதலுக்கு கண் பாய்ச்சல் எனப் பெயர். அப்பாய்ச்சல் அடிபிறழாது செல்லுதல் வேண்டும்.ஒரே வரியை மீண்டும் படிப்பதும், ஒரு வரி விட்டுப் படிப்பதும சில வேளைகளில் நிகழ்வதுண்டு. அது படிக்கும் வேகத்தைக் குறைக்கும். எனவே கண் பாய்ச்சல் நேர்மையானதாக அமையப்பயிற்சி பெறல் வேண்டும்.

**வாய்க்குட் படித்தல்**

அச்செழுத்து அல்லது கையெழுத்து ஆகிய ஒன்றினை உரக்க வாய்விட்டுப்படிக்காமல் மனத்துக்குள்ளேயே படித்துப் பொருள் உணர்தலே வாய்க்குட்படித்தல் எனப்படும். வாய்விட்டுப் படித்தல் நன்கு கைவரப் பெற்ற பின்னர் கையாள வேண்டிய முறை வாய்க்குட்படிப்பாகும். தொடக்க நிலையில் வாய்விட்டுப் படித்தலே சிறந்த பயனைத் தரும். எனினும்மேல் வகுப்புக்குச் செல்லச் செல்ல மாணவர் திறன் பெற வேண்டுவது வாய்க்குட்படிப்பேயாகும்.

மூன்றாம் வகுப்பிலிருந்து வாய்க்குட் படிப்பு தொடங்க வேண்டும். அவ்வகுப்பில் வாய்க்குட்படிப்பும், வாய்விட்டுப் படித்தலும் 40 சதவீதம், 60 சதவீதத்தில் இருக்க வேண்டும். அதாவது 2:3 என்னும் விகிதத்தில் அமைதல் நன்று எனப் பாடத்திட்டம் வரையறுத்துள்ளது.உயர்வகுப்புகளுக்குப் போகப் போக வாய்க்குட் படிப்பின் விகிதமும் உயர்ந்து கொண்டே போகவேண்டும்.

**மனதிற்குள் படித்தலை வளர்க்கும் முறைகள்**

தொடக்க நிலையில் சிறுசிறு கட்டளைகள் எழுதப்பட்ட அட்டைகளைச் சிறிது நேரம் காட்டி, அவற்றை வாய்க்குள் படிக்கச் செய்து அக்கட்டளைப்படி செயல்களைச் செய்யச்சொல்லலாம்.

குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளை எளிய தொடர்களில் எழுதி வாசிப்பு அட்டைகள் தயாரித்துக் குறித்துக் கால அளவுக்குப் படிக்கச்செய்து பின்னர் அவற்றில் வினாக்கள்கேட்கலாம்.

குறித்த நேரத்தில் கொடுத்தப் பகுதியைப் படித்து முடித்தல் வாய்க்குள் படிப்பில் பயிற்சி பெறும் வழிகளில் ஒன்றாகும்.

நூல் நிலையத்தோடு இணைந்த படிப்பகம் ஒன்று அமைத்து நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் ஆகியவற்றுள் குறிப்பாகச் சிலவற்றை நாள்தோறும் படிக்கச் செய்யலாம

**படித்தலைப் பாதிக்கும் காரணிகள்**

**தலை இயக்கம்**

ஒருபுறமாகவே தலையை வைத்துப்படிக்கும் போது கழுத்துவலி உண்டாகி படித்தலில் தடை ஏற்படுகின்றது. எனவே சரியான விதத்தில் அமர்ந்து படித்தல்வேண்டும்.

**விரல்களால் எழுத்துக்களின் மேல் சுட்டுதல்**

மாணவர்கள் ஒரு பத்தியை வாசிக்கும் போது எழுத்துக்களின் மேல் விரல்களை வைத்துக்கொண்டு கையை நகர்த்திக் கொண்டே படிப்பர். இது தவறான முறை. இது வாசித்தலின் வேகத்தைப் பாதிப்பதோடு மட்டுமன்றி நல்ல வாசிப்புப்பழக்கம் அல்ல.

**சொல்லுக்குச் சொல் வாசித்தல்**

சொல் சொல்லாக வாசிக்கும்போது வாக்கியம் உணர்த்தும் சாராம்சத்தை மாணவர்களால் முழுமையாக உணர இயலாமல் போக வாய்ப்புண்டு.

### உரக்க வாசித்தல் அல்லது வாய்விட்டுப் படித்தல்

வாய்விட்டுப் படித்தலின் போது ஒலியுறுப்புகள் எளிதல் சோர்வடைந்து வாசித்தல் தாமதமாகும். மேலும் வாக்கியம் உணர்த்தும் பொருளை உணர காலதாமதம் ஏற்படும்

### பார்வை குறைபாடு

தெளிவற்ற பார்வை வாசிப்பில் பின்னடைவை ஏற்படுத்தி கண்களில் சோர்வினை ஏற்படுத்தும். மாணவர்களில் கண்குறைபாடுகளை ஆசிரியர்கள் கண்டறிந்து அவர்களை உரிய கண்சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும்.

### செவிப்புலக் குறையாடு

மாணவர்களுக்குக் செவிக்குறையாடு இருப்பின் அவர்கள் வாசிக்கும் ஒலியினை காதுகளால் சரிவர உணர இயலாது. அத்தகைய மாணவர்களை ஆசிரியர்கள் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தகுந்த மருத்துவ பரிசோதனை செய்ய வழிகாட்டுதல் வேண்டும்.

### பேச்சுக்குறைபாடு

பேச்சுக்குறைபாடு உடைய மாணவர்களால் வார்த்தைகளைச் சரியான உச்சரிப்புடன் ஒலிக்க இயலாது. தவறாக ஒலிக்கும்போது சொற்களைத் தவறாகவும் எழுதுவர். இதனைத் தவிர்க்க ஆசிரியர் அவர்களுக்கு தகுந்த பயிற்சியளித்தல் வேண்டும்.

### வாய்விட்டுப் படிக்கக் உதவும் துணைக் கருவிகள்

### மின் அட்டைகள்

முதல் வகுப்பு மாணவர்களைப் படித்தலுக்கு அறிமுகப்படுத்த மின் அட்டைகள் நல்ல தொடக்கமாகும். தொடக்க நிலையில் அவை புத்தகங்களைவிட அதிகக் கவர்ச்சியும் பயனும் தருபவையாகும்.

### முகவரி அட்டைகள்

கட்டளைகளைத் தொடர்ந்து முகவரி அட்டைகளைக் காட்டிப் படிக்கச் செய்யலாம். வகுப்பிலுள்ள மாணவர்களின் மாணவர்களின் உண்மையான பெயர்களை எழுதுவது நன்று.

### வாக்கிய அட்டைகள்

கட்டளை அட்டைகளையும் முகவரி அட்டைகளையும் விரைவாகப் படிதது' முடித்தவுடன்வாக்கிய அட்டைகளைப் படிக்கச் செய்யலாம்.

### வாசிப்புத் தாள்கள்

மாணவர்கள் செய்து முடித்த செயல்களைக் குறித்து வாய்மொழியாகக் கூறச் செய்ய வேண்டும். கொச்சை மொழியை நீக்கித் திருத்தமுற அவற்றைப் பெரிய அளவில் கரும்பலகையில் எழுதவேண்டும்.

### அறிக்கைகள்

பள்ளியில், மாணவர் சங்க நடவடிக்கைகள, விளையாட்டுச் சங்க நடவடிக்கைகள் பற்றியஅறிக்கைகள் வாசிப்புப்பயிற்சி பெற உதவி செய்வனவாகும்.

### நாளிதழ்கள, வார மாத ஏடுகள்

செய்தி வாசித்தல் என்பது பல பள்ளிகளில் அன்றாட அலுவலாக நடந்து வருகிறது. இவை தினந்தோறும் புதியசொற்களையும் சொல்லாட்சியையும் கற்க வாய்ப்பு அளிக்கின்றன.

### கடிதங்கள்

கடிதங்களை எழுதவும், பிறருக்குப் படித்துக் காட்டவும் மாணவர் அறிதல் வேண்டும். புத்தகவிற்பனை நிலையத்துக்குக் கடிதம் எழுதுதல், விடுப்புக்காக கடிதங்கள், தொழிற்சாலைகளைப் பார்க்க அனுமதிகோரும் கடிதங்கள், நன்றி கூறும் கடிதங்கள், வாழ்த்துக் கடிதங்கள் போன்றபல பள்ளி வாழ்வில் இயல்பாய் எழுத அத்தகைய வாய்ப்புகள் ஏற்படுகின்றன

### கட்டுரைகள்

கட்டுரைகள் வாய்மொழியாகவும் அமைவதுண்டு. அவை வாய்மொழிக் கட்டுரைகள் எனப்பெறும். அதற்கு நிரல் படக்கருத்துகளைப் பேச்சின் மூலம் வெளிப் படுத்துவதே இம்முறை எழுதிய கட்டுரைகளைப் பலர் முன் படித்துக் காட்டுவதும் உண்டு. அந்நிலையில் படிப்பு பயிற்சி நிகழ இடமுண்டு.

### நாடக உரையாடல்

அந்தந்தப் பாத்திரங்களுக்குரிய உரையாடல் பகுதிகளை நெட்டுருப்போட வாய்விட்டுப் படித்தல் அவசியமாகிறது. தவிர, பேச்சுகளை உணர்ச்சி பாவத்துடன் நாடக அரங்கில் வெளியிடவேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்ய அப்பகுதிகளை உணர்ச்சியுடன் படிக்க வேண்டியிருக்கிறது.

### நூலகப் படிப்பு

அகன்ற படிப்புக்கு நன்கு உதவும் இடம் நூலகப் படிப்பாகும். நூலகத்தில் கலைக் களஞ்சியங்கள், பல்வகை இலக்கிய நூல்கள், மலர்கள், இதழ்கள் மற்றும் செய்தித் தாள்கள் இடம் பெறும். அகன்ற படிப்பினை உண்மையிலேயே பொருளுள்ள ஒன்றாக மாற்றும் இடம்நூலகமே. நூல்களைத் தாமே தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாய்ப்பும், ஆசிரியர் வழிகாட்ட அவ்வழியே நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாய்ப்பும் இதில் உண்டு. நூல்களை எவ்வாற பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி ஆசிரியர் எடுத்துரைக்கவேண்டும். உலக நடப்பகளையும், அறிவியல் கண்டுபிடிப்புகளையும், மாற்றங்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ளநூலகப்படிப்பேதுணைசெய்கிறது.

### நாளிதழ்கள் படிக்கும் பயிற்சி

தினந்தோறும் காலை, மாலை என வெளியாகும் செய்தித்தாள்களைப் படிக்கும் பழக்கத்தினை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும். அன்றாடச் செய்திகளில் முக்கியமானவைகளைப் படித்து, எழுதி, வரச் செய்யவேண்டும். இதன்மூலம் மாணவர்கள் பொது அறிவு, மொழியறிவு, கருத்துக்களை வெளி யிடும் திறன், வகைப்படுத்தும் திறன், பகுத்துத் தொகுக்கும்திறன், சுருக்கி எழுதும் திறன் போன்றவை வளரும்.

### முடிவுரை

வாசித்தல் மொழி கற்றலின் உள்ளார்ந்த பகுதியாகவும் உள்ளது. மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்கான முக்கிய ஆதாரம் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உச்சரிப்பு, சரளமான மற்றும் துல்லியமான மொழியைக் கையாளும் செய்யும் திறன்ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். மாணவர்களின் திறமை, வயது ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் தகுந்த வாசிப்புப் பயிற்சியை ஆசிரியர்கள் வழங் குதல் வேண்டும். ஆசிரியர்கள் வலியுறுத்த வேண்டும். ஒரு வாரத்தில் குறைந்தது மூன்று முறை பள்ளி நூலகத்தில் ஒரு மணி நேரம் வாசிப்பதற்கு மாணவர்களை ஆசிரியர்கள் வலியறுத்துதல் வேண்டும்.

வாசிப்பு ஞானத்தையும், அனைத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற உள்ளார்ந்த ஆசையினையும் தருகிறது. இது அனைவரையும் விமர்சன ரீதியாகயும், ஆக்கப்புர்வமாகவும் சிந்திக்க வைக்கிறது. எனவே வாசிப்பின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு ஆசிரியரும் வலியுறுத்த வேண்டும்.

### துணைநூற்பட்டியல்


1. இரத்தினசபாபதி, பிரூவிஜயா, கு. (2016). தமிழ் கற்பித்தல் முறைகள், சென்னை: சாந்தா வெளியீடு.
2. கலைச்செல்வி, வெ. (2012), தமிழ் பயிற்றல் நுட்பங்கள், குமாரபாளையம்: சஞ்சீவ் வெளியீடு
3. வேணுகோபால், இ. பா. (2009). பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், சென்னை: சாரதா பதிப்பகம்